18.08.2016

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

"தரிசு நிலங்களில் வேப்பமர கன்றுகள் நடவுக்கு ரூ.17 ஆயிரம் மானியம்'



தரிசு நிலங்களில் வேப்பமரக் கன்றுகள் நடவு செய்ய ஹெக்டேருக்கு ரூ.17 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது.

இதுதொடர்பாக, திருநெல்வேலி மாவட்ட வேளாண்மைத் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தரிசு நிலங்களில் வளர்க்கக்கூடிய மரங்களில் வேப்பமரம் முக்கியத்துவம் வாய்ந்தது. வறட்சியைத் தாங்கி நன்கு வளரக்கூடிய தன்மை உள்ளது. ஆண்டு

முழுவதும் பசுமையாகவும், குளிர்ச்சி தரும் மரமாகவும் உள்ளது. காற்று மண்டலத்தில் உள்ள நச்சுக்காற்றை உறிஞ்சுவதால் சுற்றுப்புறம் மாசுபடுவதும் தவிர்க்கப்படுகிறது. அனைத்துப் பகுதிகளிலும் அனைத்து வகை மண்ணிலும் வரும் தன்மையுடையது.

நடவு முறை: நான்கு முதல் 5 வயதுடைய வேப்பமரக் கன்றுகள் நடவு செய்ய ஏற்றது. 5-க்கு 5 மீட்டர் இடைவெளியில் 1-க்கு 1 மீ. என்ற அளவு குழியில் மண்புழு உரம், வேர் வளர்ச்சி பூசணம், உயிர் உரங்கள் கலந்து கன்றுகளை நடவு செய்ய வேண்டும். ஒரு ஹெக்டேர் பரப்புக்கு 400 கன்றுகள் தேவை. தரிசு மற்றும் மானாவாரி நிலங்களில் பருவமழை காலங்களில் நடவு செய்வது அவசியம். மழைக் காலம் முடிந்த பிறகு டிசம்பர், ஜனவரி மாதங்களில் செடிகளைச் சுற்றி களை நீக்க வேண்டும். மண்ணைக் கொத்துவதன் மூலம் வளர்ச்சி ஊக்கப்படும்.

மகசூல்: வேப்பமரம் நட்ட 5 முதல் 6 ஆண்டுகளில் பூக்கள் பூத்து காய்க்கத் தொடங்கும். 8 ஆண்டு மரத்தில் இருந்து 5 கிலோ விதையும், 10 ஆண்டு மரத்தில் இருந்து 10 கிலோ விதையும் கிடைக்கும். நல்ல சுத்தம் செய்யப்பட்ட வேப்பங்கொட்டை விதை கிலோ ரூ.5-க்கு விற்பனையாகிறது. இதன்மூலம் ஒரு ஹெக்டேருக்கு ரூ.5 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வருமானம் கிடைக்கும். ஊடுபயிர் செய்து உபரி வருமானமும் ஈட்டலாம்.

அரசு மானியம்: தரிசு நிலங்களில் வேப்பங்கன்றுகள் நடவு செய்ய ஒரு ஹெக்டேருக்கு ரூ.17 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. மரக்கன்றுகளை நடவு செய்த பிறகே மானியம் வழங்கப்படும். மேலும், ஊடு பயிர் செய்வதற்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. ஆயிரம், பராமரிப்புச் செலவுக்கு ரூ.2 ஆயிரம் மானியமாக வழங்கப்படும். இரண்டாவது ஆண்டும் ஊடுபயிர் செய்ய ரூ.1000, பராமரிப்புக்கு ரூ.2 ஆயிரம் மானியமாக வழங்கப்படும். 3ஆம் ஆண்டில் ஊடுபயிருக்கு மட்டும் ரூ.1000 மானியமாக வழங்கப்படும். எனவே, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சிவகங்கை மாவட்டத்தில் மீன்வளர்ப்பு குளங்கள் அமைக்க மானிய நிதி

சிவகங்கை மாவட்டத்தில் மீன் வளர்ப்புக் குளங்கள் அமைக்க மானிய நிதி வழங்கப்படும் என்று, மாவட்ட ஆட்சியர் சு. மலர்விழி தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: 2016-2017 ஆம் ஆண்டு தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், சொந்த நிலத்தில் ஒரு ஹெக்டேரில் ரூ. 5 லட்சம் செலவில் மீன் வளர்ப்புக் குளங்கள் அமைப்பவர்களுக்கு, அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ. 2 லட்சம் மற்றும் மீன் குஞ்சுகள் வாங்குவதற்கு ரூ. 10 ஆயிரம் என மொத்தம் ரூ. 2.10 லட்சம் பின்னிலை மானியமாக அளிக்கப்படும். எனவே, ஒரு ஹெக்டேரில் மீன் வளர்ப்புக் குளங்கள் அமைக்க விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம்.

அதற்கு சொந்த நிலம் அல்லது 10 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட நிலம் வைத்திருக்க வேண்டும். முன்னுரிமை மற்றும் தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

இதில் விண்ணப்பிக்க விருப்புவோர், சிவகங்கை பெருமாள் கோயில் தெருவில் உள்ள மீன்வள உதவி இயக்குநர் அலுவலகத்துக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு, 04575 - 240848 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெல் நடவு மேற்கொள்ளும் விவசாயிகள் ஹெக்டேருக்கு ரூ. 5,000 மானியம் பெறலாம்: வேளாண் துறை அறிவிப்பு

நெல் நடவு மேற்கொள்ளும் விவசாயிகள் ஹெக்டேருக்கு ரூ. 5,000 மானியம் பெறலாம் என்று வேளாண் இணை இயக்குநர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்தி:

ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் வாய்க்கால்களில் பாசனத்துக்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த பாசனத்தில் டி.என்.பாளையம், கோபி, ஈரோடு, கொடுமுடி, மொடக்குறிச்சி வட்டாரப் பகுதிகளில் நெல் சாகுபடி செய்ய நெல் விதைகள் போதுமான அளவு

அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தப் பருவத்துக்கு உகந்த அதிக மகசூல் தரும் என்எல்ஆர் 34449 என்ற நெல் ரக விதைகளும் இருப்பில் உள்ளது. மேலும், உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியம், உயிரியியல் பூஞ்சை கொல்லிகளான சூடோமோனஸ், டிரைக்கோடெர்மா போன்றவைகளும் அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயந்திர நடவு மேற்கொள்ள மேம்படுத்தப்பட்ட ஓர் ஹெக்டேருக்கு மானியமாக ரூ. 5 ஆயிரம் வழங்கப்படுகிறது. அனைத்து நெல் வயல்களிலும் வரப்பு பயிராக பயறு வகைகளான உளுந்து, பாசிப்பயறு, தட்டை போன்றவற்றை சாகுபடி செய்யலாம். இதற்காக விவசாயிகளுக்கு அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகிறது எனத் தெரிவித்துள்ளார்.

### கிருஷ்ணகிரி அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு

கிருஷ்ணகிரி அணையிலிருந்து முதல் போக நெல் சாகுபடிக்கு புதன்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் 9,012 ஏக்கர் பரப்பளவு நிலம் பாசன வசதி பெறுகிறது.

கிருஷ்ணகிரி அணையிலிருந்து முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டதையடுத்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் சி.கதிரவன் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் கே.அசோக்குமார் எம்பி., முன்னாள் எம்எல்ஏ, கோவிந்தராஜ், கிருஷ்ணகிரி நகர்மன்றத் தலைவர் தங்கமுத்து, காவேரிப்பட்டணம் ஒன்றியச் செயலாளர் ஜமுனா கிருஷ்ணன், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கேசவன், பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் சாம்ராஜ், கிருஷ்ணகிரி ஒன்றியக் குழு துணைத் தலைவர் சோக்காடி ராஜன், பாசன விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சி.கதிரவன் பேசியது:

கிருஷ்ணகிரி அணையின் மொத்த உயரமான 52 அடியில் தற்போது 51.15 அடி தண்ணீர் உள்ளது. இடது, வலது புற பிரதான கால்வாய்களில் முதல்போக பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ள நிலையில், பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், சௌட்டஅள்ளி, தளிஅள்ளி, கால்வேஅள்ளி, குண்டலப்பட்டி உள்ளிட்ட 16 ஊராட்சிகள், அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 9,012 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

இந்த நீர் 2017-ஆம் ஆண்டு ஜனவரி 13-ஆம் தேதி வரை 150 நாள்களுக்கு திறந்துவிடப்படும். அணையில் தற்போது உள்ள நீர் அளவினை கொண்டும், எதிர்வரும் பருவமழையினால் வரும் நீர் வரத்தினை எதிர்நோக்கியும் இடதுபுற கால்வாய் மூலம் விநாடிக்கு 80 கன அடி தண்ணீரும், வலதுபுற கால்வாய் மூலம் 75 கன அடி தண்ணீரும் என மொத்தம் 150 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். நீர் பங்கீட்டுப் பணிகளில் பொதுப்பணித் துறையினருக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அறிவிக்கப்பட்ட தேதிக்கு பிறகு எக்காரணத்தைக் கொண்டும் பாசனத்திற்கு கால நீட்டிப்பு செய்து தண்ணீர் வழங்கப்படமாட்டாது என்றார் அவர்.

## சொட்டுநீர் பாசனத்துக்கு 100 % மானியம்

மாவட்டத்தில் சொட்டுநீர் பாசனத்தில் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்ய 100 % மானியம் வழங்கப்படுவதாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில், இந்தாண்டிற்கான (2016 - 17) வேளாண் மற்றும் தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளின் பயிர் உற்பத்தி மற்றும் நீர் மேலாண்மையை அதிகரிக்க, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனத்துக்கு 4,061 ஏக்கருக்கு, ரூ. 27.98 கோடியும், வேளாண் துறைக்கு 1,359 ஏக்கருக்கு ரூ. 9.32 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக நுண்ணீர் பாசனத்தின் மூலம் விவசாய பாசன நீர் தேவையினை, 4 பங்கிலிருந்து, ஒரு பங்கு அளவாக குறைக்க முடியும்.

மேலும், தேவையான இடத்தில் மட்டும் நீர் பாய்ச்சப்படுவதால் பயிருக்கு முழுமையான நீர் கிடைப்பதோடு, நீரில் கரையும் உரங்களையும் பயிரின் வேர்களுக்கே சீராக கொடுக்க முடியும் என்பதால், உரத் தேவையும் குறையும். அதிக லாபமும் பெறலாம்.

இத்திட்டங்கள் குறித்து, விவசாயிகள் தங்கள் பகுதி தோட்டக்கலை மற்றும் வேளாண் உதவி இயக்குநர்களைத் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

இத்திட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு (2.5 ஏக்கர் வரை) 100 % மானியமும், இதர விவசாயிகளுக்கு (5 ஏக்கருக்கு மேல்) 75 % மானியமும் வழங்கப்படும்.

சொட்டு நீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள், தங்கள் நிலத்துக்கான சிட்டா, அடங்கல், நில வரைபடம், குடும்ப அட்டை நகல், மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை அறிக்கை, சிறு, குறு விவசாயிகளுக்கான சான்று ஆகிய ஆவணங்களுடன் தங்கள் பகுதியில் உள்ள வேளாண், தோட்டக்கலைத் துறை அலுவலர்களை அணுகி, பயன்பெறுமாறு மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் பொ.மணிமொழி தெரிவித்துள்ளார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### உண்ணும் கலன்களும், உடல் நலனும்

எத்தகைய பாத்திரத்தில் உணவை வைத்து சாப்பிடுகிறோம் என்பதைப் பொறுத்து உணவின் சுவையும், தரமும் கூடுகிறது. குழந்தை பேற்றுக்காக சிகிச்சை மேற்கொள்ளும் தம்பதியருக்கு மண் பாத்திரத்தில் சமைக்குமாறும், உண்ணுமாறும் பரிந்துரை செய்யப்படுகிறது. வெண்கலப் பானையில் அரிசி உப்புமா, ஈயச்செம்பில் மோர் என்பது பழங்காலத்தில் உணவியல் நடைமுறைகள். வேங்கை மரப்பிசினில் இன்சுலினை சுரக்கச் செய்யும் டிரோசிலிபின் என்ற வேதிப்பொருள்

உள்ளது. வேங்கை மரத்தில் செய்த குவளையில் நீர் அருந்தினால் சர்க்கரை நோயின் தாக்கம் குறையும் என்பது ஆயுர்வேத மருத்துவத்தின் பரிந்துரை.

## தென்னை நாற்றங்கால் சாகுபடி - கூடுதல் லாபம் பெறும் விவசாயி



"தேங்காய் விலையில் ஏற்றம், இறக்கம் உண்டு. எனினும் நவீன தொழில் நுட்பத்தின் மூலம் தென்னை சாகுபடி விவசாயிகளுக்கு என்றும் அட்சய பாத்திரமாக விளங்குவது தென்னை தான்," என்கிறார் சோழவந்தான் தென்னை விவசாயி முருகேசன், 55. இவருடைய பாரம்பரிய தொழிலே தென்னை தான். 50 ஏக்கரில் தென்னை மரம் வளர்த்து பராமரித்து வருகிறார். அத்துடன் ஒரு ஏக்கரில் நாற்றங்கால் பண்ணை அமைத்து, அதில் நாட்டு தேங்காய் நாற்றுகள், ஜாதி நாற்றுகள் வளர்த்து வருகிறார். இந்தவகை நாற்றினை நிலத்தில் நட்டு பயிரிட்டால் நான்கு ஆண்டுகளில் பலனுக்கு வந்துவிடும் ரகத்தை சேர்ந்தது. நவீனதொழில் நுட்பம் குறித்து விவசாயி முருகேசன் கூறியதாவது: இயற்கை உரத்தினை பயன்படுத்தி நாற்றுகளை வளர்க்கிறேன்.எங்களது தோப்பில் 50 ஆண்டு வயதுடைய தென்னை மரத்தில் பறிக்கப்பட்ட தேங்காயை தட்டி பார்த்து தேர்ந்தெடுப்போம். பின்னர் பசுமைகுடில் அமைத்த ஆற்றுமணல் கிடலில் தோண்டிய குழியில், மக்கிய இலைதழை குப்பைகளை நசுக்கி அடியுரமாக வைத்து பதம்பார்த்த தேங்காய் விதையை பதித்து, தண்ணீர் ஊற்ற வேண்டும். ஆடு, மாட்டு சாணத்தை நன்றாக வெயிலில் உலர வைத்து பின் அதனை தண்ணீரில் கலந்து ஒவ்வொரு நாற்று கன்றுக்கும் இடவேண்டும்.

தினமும் காலையில் தண்ணீர் தெளித்து கன்றின் வளர்ச்சி குறித்து பராமரிக்க வேண்டும். ஆறு மாதத்தில் இளங்கன்று நாற்றில் குருத்து முளைத்து பூமியில் இருந்து பாளை வெளிப்படும். இயற்கை உரமிடுதலால் பூச்சி, நோய் தாக்காது. கோல்கட்டாவில் தயா ரான அடியுர ஊட்டச் சத்தாக 'மைக்ரோ ஆர்கானிக் டானிக்' ஒரு லிட்டரில் 6 லிட்டர் தண்ணீர் கலந்து 20 கன்றுகளுக்கு அடிபகுதியில் இடவேண்டும். இந்த வகை நாற்றுகளை பயிரிட்டதில் நான்கு ஆண்டுகளில் ஒரு மரத்தில் 60 காய்களுக்கு மேல் காய்க்கிறது. இதன் மூலம் கூடுதல் மகசூல் பெற்று அதிக லாபம் ஈட்ட முடியும். இந்த நவீனதொழில் நுட்பத்திற்கு விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது என்றார். தோட்டக்கலைத்துறை, அரசின் மானியம் பெறாமல் பண்ணை அமைத்து நவீன தொழில் நுட்பத்தில் தென்னை விவசாயத்தில் சாதனை படைத்து வருகிறார். தொடர்புக்கு 98653 61133.

**- எம்.சின்ராஜா, சோழவந்தான்.**

## பசுமைக்குடிலில் வெள்ளரி சாகுபடி - சாதிக்கிறார் விவசாயி வெங்கடேஷ்



பசுமைக்குடிலில் வெள்ளரி சாகுபடி செய்து 'சாதித்து வருகிறார் ஸ்ரீவில்லிபுத்தூர் விவசாயி வெங்கடேஷ். ஸ்ரீவில்லிபுத்தூர் ரெங்கநாதபுரம் தெருவை சேர்ந்த இவர் டிப்ளமோ பட்டம் பெற்று தனியார் துறையில் பணியாற்றி வந்தார். விவசாய குடும்பத்தை சேர்ந்தவர் என்பதால் விவசாயத்தில் நாட்டம் கொண்டார். விளைவு கோட்டைப்பட்டியில் 10 ஏக்கரில் சம்பங்கி, மல்பரி, தென்னை, வெள்ளரி

பயிரிட்டுள்ளார். தோட்டக்கலைத்துறை அதிகாரிகளின் அறிவுரைப்படி, பசுமைக்குடில் அமைத்து வெள்ளரி சாகுபடி செய்து வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்.

**நவீன தொழில்நுட்பம்**: இரும்பு குழாய்களை கொண்டு குடில் அமைத்து, அதனை அல்ட்ரா வயலெட் பாலிதீன் ஷீட்களை கொண்டு மேற்கூரை அமைத்து அதனுள் பயிர்களை வளர்த்திட தேவையான சீதோஷ்ண நிலைகளை உருவாக்கி பயிர்களை அதிகபட்ச வெப்பம், குளிர், காற்று, பூச்சி, நோய் தாக்குதலில் இருந்து காத்து மகசூல் எடுப்பதே பசுமைக்குடில் தொழில் நுட்பமாகும். திறந்தவெளி சாகுபடியை விட 10 முதல் 12 மடங்கு அதிக மகசூலை பெறலாம். பருவம் இல்லாத காலங்களிலும் சாகுபடி செய்து மகசூல் பெறலாம். தண்ணீர் தேவை மிக குறைவு. தரமான, நோய் தாக்காத காய்கறிகள், மலர்களை சாகுபடி செய்ய முடியும்.

**விவசாயி வெங்கடேஷ் கூறியதாவது**: விவசாயிகளுக்கு அதிக லாபம் ஈட்டித்தரும் பசுமைக்குடில் சாகுபடிக்கு, ஒரு சதுர மீட்டருக்கு ரூ.935 வீதம் குறைந்தபட்சம் ஆயிரம் முதல் அதிகபட்சம் 4 ஆயிரம் சதுர மீட்டருக்கு ரூ.4 லட்சத்து 67 ஆயிரத்து 500 மானியமாக விவசாயிகளுக்கு வங்கி கணக்கின் மூலம் வழங்கபடுகிறது. பசுமைக்குடிலில் கடந்த ஏப்ரலில் வெள்ளரி பயிரிட்டேன். தோட்டக் கலைத்துறை அதிகாரிகளின் ஆலோசனை படி சொட்டுநீர் பாசனத்கின் மூலம், அனைத்து தொழில்நுட்பங்களையும் கடை பிடித்து வருகிறேன். வெள்ளரி பயிர் 20வது நாளில் பூக்க ஆரம்பித்து 37வது நாள் முதல் ஒருநாள் விட்டு ஒருநாள் என்ற முறையில் அறுவடை செய்து வருகிறேன். 75 நாட்களில் 22 மெட்ரிக் டன் வரை மகசூல் எடுத்து, சென்னை, கோவை, ஒட்டன்சத்திரத்துக்கு அனுப்புகிறேன். இன்னும் 15 டன் மகசூலை எதிர்பார்க்கிறேன்.

பசுமைக்குடில் அமைக்க ரூ.23 லட்சம் வரை செலவழித்து, ரூ.8 லட்சத்து 90 ஆயிரம் தோட்டக்கலைத்துறை மானியம் பெற்றுள்ளேன். ஒரே ஆண்டில் 3 பயிர்கள் மூலம் எனது முதலீடு திரும்ப கிடைக்கும் நம்பிக்கை எனக்குள்ளது என்றார். தொடர்புக்கு 98945 83379. **என்.பாலமுருகன், விருதுநகர்**

## நிலக்கடலையில் வேரழுகல் நோய் மேலாண்மை



வேரழுகல் நோயானது 'மேக்ரோபோமினா பேசியோலினா' என்ற பூஞ்சாணத்தால் இளம் செடிகளிலும் வளர்ந்த செடிகளிலும் தோன்றுகிறது. விதைத்த 30 முதல் 50 நாட்கள் வரை இந்த நோய் தாக்குதல் காணப்படும். நோய் கிருமிகள் மண்ணிலிருந்து செடிகளுக்கு பரவுகிறது. மண்ணில் வெப்ப நிலை அதிகரிக்கும் போது நோய் தாக்குதல் அதிகரிக்கும். நோய் தாக்கிய செடிகளின் வேர்கள் மற்றும் தண்டின் அடிப்பகுதி அழுகிக் காணப்படும். நோய் தாக்கிய செடிகள் காய்ந்து இறந்து விடுகின்றன.

இதனால் ஆங்காங்கே செடிகள் வளர்ச்சி குன்றி காணப்படும். நோய் தாக்குண்ட செடிகள் காய்ந்து விடுவதால் பல இடங்களில் நிலம் சொட்டை சொட்டையாய் காணப்படும். இலைகள் மஞ்சள் நிறமடைந்து பழுத்து உதிர்ந்து விடும். பாதிக்கப்பட்ட செடியும் சீக்கிரமாக காய்ந்து விடும். நோயினால் பாதிக்கப்பட்ட செடியை மெதுவாக இழுத்தாலும் எளிதாக கையோடு வந்து விடும்.

கட்டுப்படுத்தும் முறைகள்: கோடையில் ஆழமாக உழுதல் வேண்டும். பயிர் சுழற்சி முறையை கடைப்படிக்க வேண்டும். தொழுஉரம் 12.5 டன் / எக்ேடர் இட வேண்டும். முந்தைய பயிரின் கழிவுகளை அழிக்க வேண்டும். முந்தைய பயிரின் கழிவுகளை அழிக்க வேண்டும்.

தரமான விதைகளை 'டிரைக்கோடெர்மா விரிடி' 4 கிராம் / கிலோ அல்லது 'சூடோமோனாஸ் ப்ளூரசன்ஸ்' 10 கிராம் / கிலோ அல்லது 'கார்பன்டசிம்' அல்லது திரம் 2 கிராம் / கிலோ என்ற அளவில் விதை நேர்த்தி அவசியம் செய்ய வேண்டும். விதைத்த 20 - 30 நாட்களுக்குள் 'சூடோமோனாஸ் ப்ளூரசன்ஸ்' /

'டிரைக்கோடேர்மா விரிடி' 2.5 / கிலோ / எக்டேர் என்ற அளவில் அதனுடன் 50 கிலோ தொழு உரம் கலந்து இட வேண்டும். வேரழுகல் நோய் தாக்குதலின் அறிகுறிகள் தென்பட்டால், ஒரு லிட்டர் நீருக்கு 1 கிராம் 'கார்பன்டசிம்' மருந்தை கலந்து நோய் தாக்கிய செடிக்கும் அதை சுற்றியுள்ள செடிகளுக்கும் வேர்ப்பகுதி நனையும்படி மருந்து கலவையை ஊற்ற வேண்டும்.

**- பேராசிரியர் ம.குணசேகரன், பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்**

## வெங்காயத்தில் இலைப்பேன் தாக்குதல்



வெங்காய பயிரில் இலைப்பேன் தாக்குதல் உள்ளதா என விவசாயிகள் கண்காணிக்க வேண்டும். பயிரின் இளம் பருவத்தில் நிலவும் வெப்பமான கால நிலையினால், வெங்காய பயிரில் இலைப்பேன் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இலைப்பேன் தாக்குதலால் வெங்காய பயிரில் இலை முழுவதும் வெண் திட்டுக்கள் காணப்படும். கடுமையாக தாக்கப்பட்ட இலைகள் நுனியில் இருந்து காயத் தொடங்கும். இலைகள் பசுமை நிறம் குன்றி வெண்மை நிறமடைவதால் ஒளிச்சேர்க்கை பாதிக்கப்பட்டு பயிர் வளர்ச்சி குன்றும். இலைகளை ஒரு வெண்ணிற அட்டையின் மீது தட்டினால் சிறிய மெலிந்த வெளிர் மஞ்சள் மற்றும் சாம்பல் நிற இலைப்பேன்கள் நகர்வதை எளிதில் கண்டு கொள்ளலாம். இளங்குருத்துகளில் முட்டை இடும். வெங்காய பயிரில் இலைப்பேன் தாக்குதல் தீவிரமடைந்து காணப்பட்டால் 'டைமீதோபேட்' மருந்து எனில் ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி வீதமும், 'புரோபினோபாஸ்' மருந்து எனில் ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மில்லி

வீதமும் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப்படுத்தலாம். மருந்து கரைசல் இலைகளில் நன்கு படும்படி தெளிக்க வேண்டும். மருந்து கரைசல் பயிரில் நன்கு படிவதற்காக 'சாண்டோவிட்' 'இண்ட்ரான்' 'பைட்டோவிட்' 'அக்ரோவிட்' போன்ற திரவ சோப்புகளில் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு கால் மில்லி வீதம் சேர்த்து கலக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யும் போது நோய் தாக்குதலில் இருந்து வெங்காய பயிர்களை காக்க முடியும்.

## கிலோவுக்கு ரூ.25 வரை குறைந்தது துவரம் பருப்பு

ஈரோடு: துவரம் பருப்பு விலை, தொடர்ந்து குறைந்து வரும் நிலையில், கடந்த ஒன்றரை மாதத்தில், கிலோவுக்கு, 25 ரூபாய் வரை விலை சரிந்துள்ளது.

தேசிய அளவில் தட்டுப்பாடு மற்றும் பதுக்கலால், துவரம் பருப்பு விலை, கடந்த மூன்று மாதங்களுக்கு முன், மொத்த விலையில், 135 ரூபாய்க்கும், சில்லறை விலையில், 150 ரூபாய்க்கும் விற்பனையானது.கோராமால் எனப்படும் உயர்ரக பருப்பு, மொத்த விலையில் கிலோ, 150 முதல், 160 ரூபாய்க்கும், சில்லறை விலையில், 175 ரூபாய்க்கும் விற்பனையானது.கடந்த ஒரு வாரமாக, நாட்டு பருப்பு, 25 ரூபாய் குறைந்து, மொத்த விலையில், 110க்கும், சில்லறை விலையில், 120 முதல், 125 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. கோராமால் பருப்பு, 150 ரூபாய்க்கு கிடைக்கிறது.

ஈரோடு கொங்காலம்மன் அனைத்து வியாபாரிகள் சங்க துணைத்தலைவர் விமல் கூறியதாவது: ஆந்திரா, கர்நாடகா, மகராஷ்டிரா, மத்திய பிரதேசம் போன்ற பகுதிகளில், நல்ல மழை பெய்வதால், துவரம் பருப்பு சாகுபடி அதிகரித்துள்ளது. டான்சானியாவில் இருந்து, செப்., 15, செப்., இறுதி மற்றும் அக்., முதல் வாரத்தில், மூன்று கப்பல்களில் துவரம் பருப்பு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதனால், இந்தியாவில் இருப்பு வைத்துள்ளவர்கள், துவரம் பருப்பை அதிகமாக விற்பனைக்கு அனுப்புவதால், தொடர்ந்து விலை குறைகிறது. இருப்பினும், ஆக.,

15 முதல், ஜன., இறுதி வரை, பல்வேறு பண்டிகை, முகூர்த்த நாட்கள் வருவதால், இவற்றின் தேவை அதிகரிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## 'ஒற்றை நாற்று நடவு முறை சிறந்தது': வேளாண் அதிகாரி ஆலோசனை

ஈரோடு: "திருந்திய நெல் சாகுபடி எனப்படும் ஒற்றை நாற்று நடவு முறையானது, நெல் சாகுபடியில், 30 சதவீத கூடுதல் மகசூலை வழங்குகிறது," என, டி.என்.பாளையம் வேளாண் உதவி இயக்குனர் சிதம்பரம் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் கூறியதாவது: இந்த முறையில், ஏக்கருக்கு, இரண்டு கிலோ விதை நெல் போதுமானது. ஒரு ஏக்கருக்கு ஒரு சென்ட் மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைக்க வேண்டும். இந்த சாகுபடி முறையால், 40 முதல், 50 சதவீதம் வரை, நீரை சேமிக்கலாம். பூச்சி மற்றும் நோய் தாக்குதலும் குறையும். போதுமான இடைவெளி இருப்பதால், எலிகளால் ஏற்படும் சேதம் தவிர்க்கப்படும். விதை, இடுபொருட்களின் செலவு மற்றும் அளவும் குறைகிறது. உற்பத்தி செலவு குறைவதுடன், மகசூல் அதிகரிப்பதால், கூடுதல் வருவாய் கிடைக்கும். அனைத்து பருவங்களுக்கும், அனைத்து நெல் ரகங்களுக்கும் இம்முறை ஏற்றதாகும். இவ்வாண்டில், டி.என்.பாளையம் வட்டாரத்துக்கு இயந்திர நடவுக்காக, 230 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேருக்கு, 5,000 ரூபாய் மானியம் வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## விலை சரிவால் பறிக்காமல் விடப்பட்ட ஜல்லிக்கட்டு பூ

சின்னமனூர், ஆவணி முகூர்த்தம் துவங்கிய நிலையில் ஜல்லிக்கட்டு பூவிற்கு கிராக்கி இல்லாததால் செடியிலேயே பறிக்காமல் விட்டுள்ளனர். சின்னமனூரை சுற்றியுள்ள அய்யம்பட்டி, வேப்பம்பட்டி, சீலையம்பட்டி, பல்லவராயன்பட்டி பகுதியில் ஆயிரம் ஏக்கரில் பூ சாகுபடி நடக்கிறது. அதிகபட்சமாக மல்லிகை 600 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. சீலையம்பட்டி மார்க்கெட்டில் பூ மொத்த விற்பனை நடக்கிறது.

இங்கிருந்து திருச்சி, மதுரை, சென்னை, மத்திய கேரள பகுதிக்கு பூக்கள் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. கேரளாவில் ஓணம் பண்டிகை அடுத்த மாதம் கொண்டாடப்படவுள்ளது. அதற்கு அனுப்ப ஜல்லிக்கட்டு பூ பயிரிடப்பட்டுள்ளது. இதற்கான தேவை தற்போது இல்லாததால் விலை சரிந்து விட்டது. ஒரு கிலோ ரூ.30க்கு விற்பதால் பறிப்பு, வண்டி வாடகை, விற்பனை கமிஷனுக்கு கூட கட்டாது என்பதால் செடியிலேயே பறிக்காமல் விட்டுள்ளனர். ஓணம் நெருங்கும் போது இதன் விலை கிலோ ரூ.100 ஆக உயர வாய்ப்புள்ளது. பூக்களின் விலை விபரம்: மல்லிகை கிலோ ரூ.200 முதல் ரூ.250க்கும், சம்பங்கி ரூ.100 முதல் ரூ.150க்கும், பெங்களூரு பட்டன் ரோஸ் ரூ. 200க்கும், மரிக்கொழுந்து ரூ.30, துளசி ரூ.30, அரளி ரூ.60, வாடாமல்லி ரூ. 30க்கு விற்பனையானது. ஆவணி முகூர்த்த சீசன் எதிரொலியாக மல்லிகை, சம்பங்கி, பட்டன் ரோஸ்க்கு நல்ல விலை கிடைப்பதாக சீலையம்பட்டி மொத்த பூ வியாபாரி குமார் தெரிவித்தார்.-

## ஒழுங்குமுறை கூடத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

உத்தமசோழபுரம்: சேலம், உத்தமசோழபுரத்தில் உள்ள மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்குழு வளாகத்தில், தேர்வு செய்யப்பட்ட, 20 விவசாயிகளுக்கு மூன்று நாட்கள் பயிற்சி முகாம் நேற்று முன்தினம் துவங்கியது. சேலம் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்குழு செயலாளர் செல்லதுரை பேசியதாவது: நீங்கள் உற்பத்தி செய்யும் வேளாண் விளை பொருட்களை, அறுவடை செய்து அருகில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கு கொண்டு வர வேண்டும். உரிய விலை கிடைக்காவிட்டால், கிடங்கில் இருப்பு வைத்து பொருளீட்டு கடன் பெறலாம், உரிய விலை கிடைக்கும் போது விற்பனை செய்து கொள்ளலாம். இவ்வாறு அவர் பேசினார்.

## பந்தல் காய்கறிகளுக்கு 50 சதவீதம் மானியம்

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில், பந்தல் காய்கறி சாகுபடி முறையை ஊக்கப்படுத்தும் வகையில், 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பந்தல் காய்கறி சாகுபடி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அவரை, புடலை, பாகற்காய், கோவக்காய், பீர்க்கன் சாகுபடியில் அதிக மகசூல் கிடைக்கிறது. ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு

பந்தல் காய்கறி சாகுபடியில் ஆர்வத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக 50 சதவீதம் மானியத்தில் ஹெக்டேருக்கு ரூ.2 லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. இதே போல் தேனீ வளர்ப்பு திட்டத்தில் 300 தேன் கூடு பெட்டிகள் வழங்கப்படும். தலா ரூ.60 ஆயிரம் மானியத்தில் 15 பவர் டில்லர்கள் வழங்கப்பட உள்ளதாக, தோட்டக்கலை துணை இயக்குனர் தமிழ் வேந்தன் கூறினார்.

## காளான் வளர்ப்புக்குரூ.62,500 மானியம்

ராமநாதபுரம்,:காளான் வளர்ப்புக்கு ரூ.62 ஆயிரத்து 500 மானியம் வழங்கப்படும், என தோட்டக்கலை துணை இயக்குனர் தமிழ் வேந்தன் தெரிவித்தார்.அவர் கூறியதாவது:ராமநாதபுரம் மாவட்டத்தில் காளான் வளர்ப்பிற்கு புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக, 2016-17ம் ஆண்டில் ஆர்வம் உள்ள தகுதியான 14 விவசாயிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இவர்களுக்கு, தோட்டக்கலைத்துறை சார்பில் காளான் வளர்ப்பு குறித்த பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியாளர் ஒருவர் இவர்களுக்கென தனியாக நியமிக்கப்படுவார். அவர் விவசாயிகளின் பண்ணைகளுக்கே சென்று காளான் வளர்ப்பு குறித்து பயிற்சி அளிப்பார். காளான் வளர்ப்பு திட்டத்தில் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.62 ஆயிரத்து 500 மானியமாக வழங்கப்படுகிறது. இதற்காக மாவட்டத்திற்கு ரூ.12.75 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, ஆர்வம் உள்ள விவசாயிகள் இந்த சிறப்பு திட்டத்தின் கீழ் பயனடையலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

ஆர்.எஸ்.மங்கலம், :மத்திய அரசின் வேளாண் நீர் பாசன திட்டத்தின் கீழ் ஆர்.எஸ்.மங்கலம் அருகே அழகர்தேவன் கோட்டையில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் மோகன்ராஜ் தலைமை வகித்தார். அலுவலர் வினோதினி முன்னிலை வகித்தார். வேளாண் இணை இயக்குனர் (பொ)அரிவாசன் குறுகிய கால பயிர் சாகுபடி செய்வதன் பயன்கள் குறித்து விளக்கம் அளித்தார். துணை வேளாண்மை அலுவலர் ராமகிருஷ்ணன், தொழில் நுட்ப மேலாளர் அன்னலெட்சுமி , உதவி அலுவலர் பானுபிரியா, ராம்குமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## நீர் மேலாண்மை பயிற்சி

ராமநாதபுரம்: பிரதமர் வேளாண் நீர் பாசன திட்டத்தின் கீழ் நீர் சேகரிப்பு மற்றும் மேலாண்மை பயிற்சி தேவிபட்டினம் அரசு தென்னை நாற்று பண்ணையில் நடந்தது. வேளாண் துணை இயக்குனர் வெள்ளைச்சாமி தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் ஜாகீர் உசேன், வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு தலைவர் தமயந்தி முன்னிலை வகித்தனர். ராமநாதபுரம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் வேல்குமார் வரவேற்றார். வட்டார வேளாண் அலுவலர் ராஜலட்சுமி, நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் மதியழகன், முன்னோடி வங்கி மேலாளர் சுரேஷ்பாபு, டேர் பவுண்டேஷன் நிறுவனர் முருகேசன், விவசாயி ராஜேந்திரன், வேளாண் விற்பனை அலுவலர் அரவிந்தன், தோட்டக்கலை துணை அலுவலர் காசிநாதன், கால்நடை டாக்டர் ஜெயப்பிரகாஷ், உதவி வேளாண் அலுவலர்கள் ஜெயக்கொடி, கவிதாஞ்சலி, உதவி தொழில் நுட்ப மேலாளர் சுபாஷ் சந்திர போஸ் பங்கேற்றனர். ஏற்பாடுகளை தென்னை நாற்று பண்ணை வேளாண் அலுவலர் ஸ்ரீதர், வட்டார தொழில் நுட்ப மேலாளர் கோசலா தேவி செய்தனர்.

## மீன் வளர்க்க ரூ.2 லட்சம் மானியம்

சிவகங்கை, :தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் ஒரு எக்டேரில் ரூ.5 லட்சத்தில் மீன்வளர்ப்பு குளங்கள் அமைப்போருக்கு ரூ.2 லட்சம் மானியம். மேலும் மீன் குஞ்சுகள் வாங்க ரூ.10 ஆயிரம் கூடுதலாக தரப்படும். மீன் வளர்ப்பு குளம் சொந்த நிலம் அல்லது 10 ஆண்டு குத்தகைக்கு பெற்ற நிலத்தில் இருக்க வேண்டும். முன்னுரிமை, தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர். விரும்புவோர் மீன்வள உதவி இயக்குனர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## காடையாம்பட்டியில் மஞ்சள் பயிரில் களை எடுக்கும் பணி தீவிரம்

காடையாம்பட்டி: காடையாம்பட்டியில் மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகள், களை எடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஓமலூர் காடையாம்பட்டி, தும்பிபாடி, டேனிஷ்பேட்டை, பண்ணப்பட்டி, குண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் அதிக அளவு மஞ்சள் பயிரிட்டுள்ளனர். ஒரு வருட பயிரான மஞ்சள் செடிகளில், அவ்வப்போது களை எடுத்தல் கால்மாற்றுதல் உள்ளிட்ட பணிகளை செய்து வருகின்றனர். தற்போது ஓமலூர் வட்டாரத்தில் ஓரளவு மழை பெய்துள்ளதால், மஞ்சள் தோட்டங்களில் அதிக அளவு கோரைப்புல், பார்த்தீனியம் செடிகள் வளர்ந்துள்ளன. இதையடுத்து காடையாம்பட்டி பகுதி விவசாயிகள், தங்கள் தோட்டங்களில் முளைத்துள்ள களைகளை அகற்றி வருகின்றனர். மஞ்சள் நடவு செய்த நாள் முதல், அறுவடைக்கு வரும் வரை சுமார் 7 முதல் 8 முறை களையெடுக்க வேண்டும் என்றும், களை எடுத்து நிலத்தை கொத்திவிட்டால் தான், மஞ்சள் கிழங்குகள் நன்கு செழிப்பாக வளரும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர். தற்போது காடையாம்பட்டி பகுதியில் மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகள், களை எடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்

நாமக்கல்,: நாமக்கல் திருச்சி சாலை கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மைய தலைவர் கோபாலகிருஷ்ணமூர்த்தி கூறியதாவது:நாமக்கல் திருச்சி சாலையில் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் மாதந்தோறும் நாட்டுக்கோழி வளர்ப்பில் மூலிகை மருத்துவத்தின்

முக்கியத்துவம்  குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்து வருகிறது. கெமிக்கல்கள் நிறைந்த தீவனங்களை உண்ணும் கோழிகளுக்கும், அதனை உண்ணும் மனிதர்களுக்கும்  பல்வேறு நோய்கள் பரவி வருகிறது. எனவே, சீரகம், வெந்தயம், கீழாநெல்லி இலை  போன்ற மூலிகைகளை கொண்டு நாட்டுக்கோழிக்கு ஏற்படும் நோய்களை விரட்ட  முடியும். அதே போல் மூலிகைகளை உண்டு வாழும் நாட்டுக்கோழியை உண்ணும்  மனிதர்களுக்கும் கோழிகளால் நோய்கள் பரவுவது தடுக்கப்படுகிறது.

முகாமில் கோழி வளர்ப்பில் மூலிகை மருத்துவத்தின் பயன்கள்  குறித்தும், கோழிகளுக்கு ஏற்படும் நோய்களை மூலிகைகளை கொண்டு விரட்டுவது குறித்தும் பண்ணையாளர்களுக்கு எடுத்து கூறப்படுகிறது. இம்மாதத்திற்கான ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு வரும் 23ம் தேதி மதியம் 1.30  மணிக்கு நடக்கிறது. மேலும் விபரங்களுக்கு 04286 233230 என்ற தொலைபேசி  எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**புதன்சந்தையில் ஆடுகளின் விலை சரிவு**

சேந்தமங்கலம், : நாமக்கல் மாவட்டம், புதன்சந்தை தமிழக அளவில் பிரசித்தி பெற்ற பெரிய சந்தையாகும்.இங்கு வாரந்தோறும் செவ்வாய்கிழமை மாட்டுச்சந்தையும், புதன்கிழமை ஆட்டுச்சந்தையும் கூடுவது வழக்கம். சுற்றுவட்டாரப்பகுதியில் இருந்து ஏராளமான ஆடுகள், குட்டிகள், கிடா விற்பனைக்கு வரும். இதனை வாங்க நாமக்கல், சேந்தமங்கலம், எருமப்பட்டி, பவித்திரம், புதுச்சத்திரம் உள்ளிட்ட பல்வேறு  பகுதிகளிலிருந்து ஏராளமான வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் வருவார்கள்.நேற்று  கூடிய ஆட்டுச்சந்தையில், சுற்றுவட்டாரப் பகுதியிலிருந்து அதிகளவில் ஆடுகள்  விற்பனைக்கு வந்திருந்தது. ஆடுகளின் வரத்து அதிகரித்துள்ள நிலையில், ஆவணி மாத தொடக்கத்தையொட்டி ஆடுகளின் விலை சரிந்தது. நேற்றைய சந்தையில் 10 கிலோ  எடை கொண்ட இறைச்சி ஆடு □ 3,500க்கும், வளர்ப்பு ஆடு □3,600க்கும் விற்கப்பட்டது.

பிறந்து ஒரு மாதமே ஆன பெண் குட்டி ஆடு 500க்கும், கிடா குட்டி 600க்கும் விற்பனையானது.

## முதல் போக நெல் சாகுபடிக்கு கிருஷ்ணகிரி அணையில் நீர் திறப்பு : 9012 ஏக்கர் பாசன வசதி பெறும்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அணையில் இருந்து முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் 9012 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். கிருஷ்ணகிரி அணையில் இருந்து முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதையடுத்து நேற்று மதியம் 2 மணியளவில், முதல் போக நெல் சாகுபடிக்கு, கலெக்டர் கதிரவன் தண்ணீரை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அசோக்குமார் எம்பி, முன்னாள் எம்எல்ஏ, கோவிந்தராஜ், கிருஷ்ணகிரி நகராட்சி தலைவர் தங்கமுத்து, காவேரிப்பட்டணம் ஒன்றிய செயலாளர் ஜமுனா கிருஷ்ணன், ஆவின் பெருந்தலைவர் தென்னரசு, தர்மபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கேசவன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் சாம்ராஜ், கிருஷ்ணகிரி ஒன்றிய குழு துணைத் தலைவர் சோக்காடி ராஜன் மற்றும் பாசன விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

கிருஷ்ணகிரி அணையின் மொத்த உயரமான 52 அடியில், தற்போது 51.15 அடி தண்ணீர் உள்ளது. இடது மற்றும் வலது புற பிரதான கால்வாய்களில் முதல்போக பாசனத்திற்காக திறந்து விடப்பட்டுள்ள தண்ணீரால் பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், சவுட்டஅள்ளி, தளிஅள்ளி, கால்வேஅள்ளி, குண்டலப்பட்டி, மிட்டஅள்ளி, எர்ரஅள்ளி, பெண்ணேஸ்வரமடம், காவேரிப்பட்டணம், பாலேகுளி, மாரிசெட்டிஅள்ளி, நாகோஜனஅள்ளி, ஜனப்பரஅள்ளி, பையூர் ஆகிய 16 பஞ்சாயத்துகளில் பல்வேறு கிராமங்களை சேர்ந்த 9012 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். வருகிற 2017ம் ஆண்டு ஜனவரி மாதம் 13ம் தேதி வரை 150 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். அணையில் தற்போது உள்ள நீர் அளவை கொண்டும், பருவமழையால் வரும் நீர் வரத்தை

எதிர்நோக்கியும் இடதுபுற கால்வாய் மூலம் வினாடிக்கு 75 கன அடி தண்ணீரும், வலதுபுற கால்வாய் மூலம் 75 கன அடி தண்ணீரும் என மொத்தம் 150 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது

## போச்சம்பள்ளியில்இயற்கை முறையில் 20 வகை கீரை சாகுபடிவேளாண் பட்டதாரி அசத்தல்

போச்சம்பள்ளி: போச்சம்பள்ளியில் இயற்கை முறையில் 20 வகையான கீரைகளை சாகுபடி செய்து வேளாண் பட்டதாரி வாலிபர் அசத்தி வருகிறார். போச்சம்பள்ளி தாலுகா கோணனூரை சேர்ந்தவர் யுவராஜ். வேளாண் பட்டய படிப்பு முடித்துள்ளார். புளியம்பட்டியில் உள்ள முல்லை குழந்தைவேலு என்பவரது நிலத்தில் இயற்கை உரங்களை கொண்டு கீரை வகைகளை சாகுபடி செய்து வருகிறார். இதுகுறித்து யுவராஜ் கூறியது: 'கீரைகள் உட்கொள்வதால் பல்வேறு நன்மைகள் உள்ளது. ஆனால் கீரை சாகுபடியிலும் ரசாயனத்தின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால் சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்தி, அரைக்கீரை, முளைக்கீரை, பொன்னாங்கண்ணி, பசலை, மணத்தக்காளி, சிறுகீரை என 20 வகையான கீரைகளை இயற்கை முறையில் சாகுபடி செய்கிறேன். வழக்கமான உரங்களை பயன்படுத்தாமல், பழரசங்களை உரமாக இடுகிறேன்.

ஒரு ஏக்கர் நிலத்தில் கீரை சாகுபடி செய்ய, இரண்டு டன் தொழு உரம் போட்டு, மண்ணில் கட்டியில்லாத அளவுக்கு உழவு செய்ய வேண்டும். கீரை சாகுபடியில் தொழுவுரம் மிக அவசியம். அடியுரமாக தொழுவுரம் கொடுத்தால், ரசாயன உரத்துக்கான செலவு மிகவும் குறையும். பத்தடி நீளம், ஆறடி அகலத்தில் பாத்திகள் எடுத்து, நிலத்தின் அமைப்புக்கு ஏற்ப வாய்க்கால் அமைத்து கொள்ள வேண்டும். ஓராண்டில் ஒன்பது தடவை முளைக்கீரை, மூன்று தடவை சிறுகீரை, தலா இரண்டு தடவை அரைக்கீரை, மணத்தக்காளி, தலா ஒரு தடவை பசலை மற்றும் பொன்னாங்கண்ணி கீரை சாகுபடி செய்கிறேன். கீரை சாகுபடியில் நிச்சயம் லாபம் உள்ளது. இயற்கை முறை சாகுபடி என்பதால் மக்கள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர் என்றார்.

## திருமூர்த்தி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு

பொள்ளாச்சி, : திருப்பூர் மாவட்டம், உடுலையை அடுத்த திருமூர்த்தி அணையிலிருந்து 4 மண்டல பாசனத்துக்கு, வருடத்துக்கு இரண்டு மண்டலம் என்ற விகிதத்தில், இரண்டு ஆண்டுகளில் 4 மண்டலங்களுக்கும் சுழற்சி முறையில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. பாசனத்துக்கு வசதியாக, கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு பரம்பிக்குளத்திலிருந்து கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிலையில், திருமூர்த்தி அணையில் இருந்து இரண்டாம் மண்டல பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது தொடர்பாக, விவசாயிகள் மற்றும் பிஏபி அதிகாரிகள் பங்கேற்ற கலந்தாலோசனைக் கூட்டம், பொள்ளாச்சி பிஏபி அலுவலகத்தில் நடந்தது. பிஏபி தலைமை கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன் தலைமை தாங்கினார். செயற் பொறியாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, லோகநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதன் முடிவில், திருமூர்த்தி அணையிலிருந்து வரும் செப்டம்பர் 11ம் தேதி 2ம் மண்டல பாசன பகுதிக்கு தலா 18 நாட்கள் என்று இரண்டு சுற்றுகளாக தண்ணீர் திறப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

## மார்க்கெட்டில் சின்னவெங்காயம் வரத்து அதிகரிப்பால் விலை சரிவு

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியில், பெல்லாரி மற்றும் சின்னவெங்காயம் விற்பனை செய்வதற்கென தனி மார்க்கெட் உள்ளது. இங்கு சுற்றுவட்டார பகுதியிலிருந்தும் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் சின்னவெங்காயம் வரத்து இருக்கும். இதில் இந்த ஆண்டில் கடந்த ஜூன் வரை வரத்து குறைவால் அப்போது ஒரு கிலோ ரூ.60 வரை விற்பனையானது. அதன் பின் கடந்த ஜூலையில் இருந்து தமிழகத்தில் பல்வேறு பகுதியிலிருந்தும், கர்நாடக மாநிலத்திலிருந்தும் சின்னவெங்காயம் வரத்து அதிகரிக்க துவங்கியது. இதனால் அதன் விலை குறைந்தது. இந்நிலையில், தென்மேற்கு பருவமழைக்கு பிறகு இந்த மாத துவக்கத்திலிருந்து, வெளியூர்களில் இருந்தும் வரத்து வழகத்தைவிட அதிகரிக்க துவங்கியுள்ளது. இதனால், தற்போது ஒரு கிலோ ரூ.15 முதல் அதிகபட்சமாக ரூ.20 வரை என குறைந்த விலைக்கு விற்பனையாவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பூக்கள் விலை உயர்வு**

கோவை, : கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் மொத்த பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு ரக பூக்கள் வருகிறது. தினசரி அனைத்து பூக்களும் 20 டன் அளவில் வருவது வழக்கம். இந்நிலையில், ஒரு மாதத்திற்கு பிறகு நேற்று திருமண முகூர்த்தம் வந்ததால், கடந்த 2 நாட்களாக பூக்கள் வரத்தும், விற்பனையும், விலையும் அதிகரித்தது. நேற்று (17ம் தேதி) விற்பனையான பூக்களின் விலை விபரம் : சென்டு மல்லி ஆரஞ்சு ரூ.20, சென்டு மல்லி மஞ்சள் ரூ.20, கொய்மலர் ரோஜா சாதா 100 எண்ணிக்கை ரூ.100, இதர ரோஜா கிலோ ரூ.120, சம்பங்கி ரூ.60, மல்லி ரூ.240, முல்லை ரூ.240, ஜாதிப்பூ ரூ.240, பட்டுப்பூ ரூ.100, மேரிகோல்டு ரூ.100, அரளி ரூ.100, துளசி ரூ.40, மருகு கட்டு ரூ.4, மரிக்கொழுந்து கட்டு ரூ.5. இதுபற்றி வியாபாரிகள் கூறுகையில், 'நேற்று ஆவணி மாதம் துவங்கியதால் திருமண முகூர்த்தங்களும் துவங்கியுள்ளது. வரும் 21, 22 ஆகிய தேதிகளிலும் முகூர்த்தம் வரவுள்ளதால், விலை மேலும் உயரும் வாய்ப்புள்ளது' என்றனர்.

**கோவையில் ரூ.3 கோடிக்கு தேயிலைத்தூள் விற்பனை**

கோவை, : கோவை தேயிலை வர்த்தக மையத்தில் நேற்று மாலை நடந்த ஏலத்தில் உள்ளூர் ரகம் (டஸ்ட்) 2.18 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 2.11 லட்சம் கிலோ விற்பனையானது. 116 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.97.21. விற்பனை மதிப்பு ரூ.2.05 கோடி. ஏற்றுமதி ரகம் (லீப்) 1.36 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. 1.11 லட்சம் கிலோ விற்பனையானது. 96 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.88.21. விற்பனை மதிப்பு ரூ.98 லட்சம். கடந்த வார விற்பனையோடு ஒப்பிடுகையில், உள்ளூர் ரகம் கிலோவுக்கு ரூ.3.02ம், ஏற்றுமதி ரகம் கிலோவுக்கு 22 பைசாவும் அதிகரித்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் ரூ.3.03 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரத்தை காட்டிலும் ரூ.80 லட்சம் குறைவாகும்.

## ரூ.1.30 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

அனுப்பர்பாளையம், ;அவிநாசி அருகே சேவூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரூ.1.30 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நடைபெற்றது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 51 மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.6,000 முதல் ரூ.6,350 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ. 5,450 முதல் ரூ.5,900 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ.5,100 முதல் ரூ.5,400 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.1.30 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

## திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

ஊட்டி, : பல நாட்களுக்குப் பின் நேற்று ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மழை பெய்ததால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். இம்முறை தென்மேற்கு பருவமழை பொய்த்த நிலையில், நீலகிரி மாவட்டத்தில் விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது. அணைகள், குளங்கள் மற்றும் கினறுகளில் தண்ணீர் குறைந்து காணப்படுகிறது. கோடையில் தண்ணீர் பிரச்னை ஏற்படும் அபாயம் நீடிக்கிறது. இந்நிலையில், பல நாட்களுக்கு பின் நேற்று ஊட்டி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் சுமார் ஒரு மணி நேரம் மிதமான மழை பெய்தது. இதனால், தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கி நின்றது. விவசாய நிலங்களில் உள்ள தேக்கங்களில் தண்ணீர் தேங்கி நின்றதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். அதேபோல், தண்ணீர் பிரச்னையில் இரு மாதங்களுக்கு மேல் தவித்து வரும் ஊட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதி மக்கள் நேற்று பெய்த மழையால் சற்று நிம்மதியடைந்தனர். தொடர்ந்து இதேபோன்று ஒரு சில நாட்கள் மழை பெய்தால், தண்ணீர் பிரச்னை குறையவும் வாய்ப்புள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.